## 37. இஸ்ரவேலே நீ பயப்படாதே

### பல்லவி

இஸ்ரவேலே நீ பயப்படாதே
யாக்கோபே நீ அஞ்சிடாதே
உன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
இன்றும் என்றும் நடத்திடுவார்

### அனுபல்லவி

*வாலாக்காமல் தலையாக்குவார்*
*கீழாக்காமல் மேலாக்குவார்*

### சரணங்கள்

1. கையிட்டு செய்யும் வேலையெல்லாம்
கர்த்தர் உன்னோடு இருந்திடுவார்
பூமியில் உள்ள ஜனங்களுக்கு
உன்னை மேன்மையாக வைத்திடுவார்
- வாலாக்காமல்

2. கர்ப்பத்தின் கனியை பாதுகாத்து
நிலத்தின் பலனை பெருகசெய்வார்
உன்னுடைய ஆகாரம் ஆசீர்வதித்து
உன்னில் ஆரோக்கியம் தந்திடுவார்
- வாலாக்காமல்

3. உன்னுடைய போக்கையும் வருகைமே
இதுமுதற்கொண்டு பார்த்துகொள்வர்
சத்துருக்கள் உந்தன் கண் முன்னே
பணிந்து குனிந்து போக செய்வார்
- வாலாக்காமல்

4. பரிசுத்த ஜனமாக உன்னை என்றும்
நிலைத்து இருக்க செய்திடுவார்
அநேக ஜனத்திற்கு கடன்கொடுப்பாய்
நீயோ கடன் வாங்கமல் இருப்பாய்
- வாலாக்காமல்